M. 6311 ★ 51331 ★ 1953 ★ ★ 10

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

இரா. செழியன்

மலர்: 20] சென்னை: ஐப்பசி 17 (1—12—72) வியாழன் வெளியூர்: ஐப்பசி 18 (3—11—72) வெள்ளி [இதழ்: 116

புதுவையில் அனல் மின் நிலையம்?

சென்னை, நவ. 2—

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் புதுவை மாநிலத்தில் அனல் மின்சார நிலையம் ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு பற்றி ஆராய்வதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை அனுப்ப மத்திய மின்சார -- நீர்ப்பாசனத் துறை ஒப்புக் கொண்டிருக்கிறது.

"இந்த அனல் மின்சார நிலையம் ஏற்பட்டால், புதுவையில் மின் தட்டுப்பாடு குறைய மிகவும் உதவியாக இருக்கும்" என்று முதலமைச்சர் பாரூக் தெரிவித்தார்.

இந்திரா காந்தியின் பதில் என்ன?

தமிழகத்திற்கு ஒரு நீதி-மற்ற மாநிலங்கட்கு ஒரு நீதியா?

கலகத்தைத் தூண்டிவிடும் குட்டித் தேவதைகள் இங்கு வருவதேன்?

தமிழ்ப் பகைவர்களுக்கு இனித் தமிழ்நாட்டில் இடங்கொடோம் -- முதல்வர் கலைஞர் முழக்கம்

" மாநில சுயாட்சிக் கோரிக்கைக்காக மக்களின் சக்தியைத் திரட்டிக் கொண்டுவந்த நேரத்தில் சோதனை ஒன்று ஏற்பட்டிருக்கிறது; அந்தச் சோதனையும், மாநில சுயாட்சிக் கொள்கைக்கு எதிரான சோதனையாக ஏற்பட்டிருக்கிறது!

" மத்திய அரசு துணைக்கு அழைக்கப்படுகிறது! 180-க்கு மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற பெரும்பான்மையான அரசைக் கவிழ்க்கக் காலித்தனங்களும் -- கயமைத்தனங்களும் -- கட்டுமீறிய வன்முறைச் செயல்களும் தலைதூக்கும் நேரத்தில், அவற்றை அடக்கி ஒடுக்கவே மத்திய அரசு துணைக்கு வர வேண்டும்.

" 1965-ம் ஆண்டு இந்தி எதிர்ப்பின்போது, தமிழகமெங்கும் இரணகளமாக இருந்த நேரத்தில், தமிழகத்தின் அப்போதைய முதலமைச்சரை -- அப்போதைய மத்திய அரசு உள்துறை அமைச்சர் நந்தா, கற்பாறையைப்போல் நிலைமையைச் சமாளித்து வருகிறார்' என்று நாடாளுமன்றத்திலேயே பாராட்டு கூறினார்! அதற்குக் காரணம், மத்தியிலும் -- மாநிலத்திலும் ஒரே கட்சியின் ஆட்சி இருந்ததுதான்.

" அன்றைக்கு மத்திய அமைச்சராக இருந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரி சென்னைக்கு வந்து வானொலியில் பேசுகையில், 'அரசுச் சொத்துக்களுக்குச் சேதம் உண்டாக்கினால பார்த்துக்கொண்டிருக்க முடியாது' என்று எச்சரிக்கை விடுத்தார்! ஆனால் இன்றோ -- வன்முறையை அடக்கி ஆளுகின்ற அரசுக்கு எச்சரிக்கை தரப்படுகிறது.

" தமிழ்நாட்டில் சிறு நிகழ்ச்சிகள் நடந்தாலும், மத்திய அமைச்சர்கள் உடனடியாக ஓடிவந்து, மத்திய அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது' என்று பேசுகிறார்கள், இப்படிப் பேசி அவர்கள், கலகக்காரர்களைத் தூண்டும் வேலையில் ஈடுபடுகிறார்கள்! ஆனால், பஞ்சாப் – அசாம் மற்றும் பல மாநிலங்களில் வன்முறை நிகழ்ச்சிகள் நடந்தாலும் அவற்றைப் பற்றிப் பேசுவதில்லை' தமிழ்நாட்டில்; கடுகளவு கலவரம் தோன்றினாலும் அதை மலையளவாக ஆக்கி, 'தமிழக அரசைக் கவிழ்க்க முடியாதா' என்று மத்திய அரசில் உள்ள சில 'குட்டித் தேவதை'கள் தமிழ்நாட்டை வலம் வந்து கொண்டிருக்கின்றன! அந்தக் 'குட்டித் தேவதை'களைத் தலைமையமைச்சர் அங்கேயே கட்டிப் போடவேண்டும்! அல்லது 'தமிழ் நாட்டில் பேசிய மூன்று மத்திய அமைச்சர்கள் பேச்சுக்கும் -- எனது கருத்துக்கும் சம்பந்தம் இல்லை' என்று அவர் சொல்ல வேண்டும்! அப்படிச் சொல்லவில்லை என்றால், 'நான்தான் அப்படிப் பேச அனுப்பினேன்' என்றாவது தெரிவிக்க வேண்டும்.

" பொறுப்புப் பறிக்கப்படுவது பற்றியோ -- கோட்டையிலிருந்து வெளியேற்றப்படுவது பற்றியோ நாங்கள் கவலைப்படவில்லை! ஆனால், தமிழகத்திற்கு ஒரு நீதி -- மற்ற மாநிலங்களுக்கு வேறொரு நீதியா என்றுதான் கேட்கிறோம்!!

என்று கழகத் தலைவரும் முதலமைச்சருமான கலைஞர் அவர்கள், தமிழ் மாநிலம் அமைந்த 16-வது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்புரையாற்றுகையில் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

தனித் தமிழ் மாநிலம் அமைந்த 16-வது ஆண்டு நிறைவு விழா, தமிழரசுக் கழகத்தின் சார்பில் நேற்று மயிலாப்பூர் இராஜேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழரசுக் கழகப் பொதுச்செயலாளர் டி. கே. சண்முகம் எம்.எல்.சி. அனைவரையும் வரவேற்றார்.

விழாவிற்குத் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எம்.எல்.சி. தலைமை தாங்கினார்.

விழாவில் ம.சி. கிருஷ்ணமூர்த்தி, ஜனார்த்தனம், தியாகராசன் எம்.எல்.ஏ., புதுவை முதலமைச்சர் எம். ஓ. எச். பாரூக் ஆகியோர் பேசினர்.

இறுதியில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

" தி. மு. கழக அரசின் சாதனைகளை மறைக்கத்தான், இலஞ்சம் -- ஊழல் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

எந்தக் குறிப்பிட்ட குற்றச்சாட்டையாவது கவர்னரிடம் கொடுத்தாலும் -- குடியரசுத் தலைவரிடம் கொடுத்தாலும், என்மீதோ அல்லது அமைச்சரவையைச் சேர்ந்த எந்த அமைச்சர்கள் மீதோ அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அதற்குரிய தண்டனையை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

குற்றச்சாட்டைக் கொடுப்பவருக்கு, அந்தப் பட்டியல் பல நாட்கள் முன்பே கிடைத்திருக்கும்; அந்த குற்றச்சாட்டுக்களை எப்பொழுதோ கொடுத்து விசாரிக்கச் சொல்லியிருக்கலாம்; உள்ளபடியே, 'நாம் வளர்த்தக் கட்சி -- இயக்கம்' என்ற எண்ணம் அவருக்கு இருந்திருக்குமேயானால் செயற்குழுவில் அதனை வைத்திருக்கலாம்; அவைகளையெல்லாம் செய்யாமல் கட்சியிலிருந்து வெளியேறி, 'தமிழ் மக்களின் அரசைக் காட்டிக்கொடுத்தே தீருவேன்' என்கின்ற அளவுக்குச் சென்றிருப்பதற்குக் காரணம் என்னவோ?

இப்பொழுது நடக்கின்ற போராட்டம், தியாகத்திற்கும்-- தியாகத்தை வைத்து இலாபம் சம்பாதிக்க நினைக்கின்றவர்களுக்கும் நடக்கின்ற போராட்டமே தவிர வேறு அல்ல!

சிறைச்சாலை சென்றவர்கள் உண்மையான அரசியலை உணர்ந்திருப்பார்கள்!

கழக அரசே போய்விட்டாலும்-- கோட்டையிலிருந்து நாங்கள் வெளியேற்றப்பட்டாலும் கூட நாம் அனைவரும் சேர்ந்து தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வுக்காக பாடுபடுவோமே தவிர, எங்களுக்கு வேறு வேலை இல்லை!

எங்கள் ஆட்சி கவிழ்ந்துவிட்டாலும், வரப்போகின்ற ஆட்சி காமரா[illegible] ஆட்சியாகத்தான் இருக்கு[illegible]; காமராசர் போன்ற தமிழரி[illegible] ஆட்சிதான் வர வேண்டு[illegible] என்று விரும்புவோ[illegible] தமிழ்ப் பகைவர்களின் ஆட்சி [illegible]நாட்டில் வர ஒரு காலும் விரும்பமாட்டோம்!

கழக ஆட்சிக்கு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க திராவிட முன்னேற்றக் கழகம் தமிழரசுக் கழகம்--முஸ்லிம் லீக் -- பார்வர்டு பிளாக் இன்னும் தமிழ்ப்பெருங்குடி மக்கள் திராவிடர் கழகம் ஆகிய அனைவரும் ஒரே அணியில் தான் இருக்கின்றோம்; தமிழ்ப் பற்றோடு -- தமிழர் நலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வோடு நாங்கள் ஒரே அணியில் இருக்கிறோம்.

தமிழரசுக் கழகத்திலிருந்து கூட முன்பு சிலர் பிரிந்தார்கள்; மாநில சுயாட்சிக்கு எதிரிகளாகி விட்டார்கள்; அது -- போலவே, திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து சிலர் போனாலும், அவர்களும் மாநில சுயாட்சிக்கு விரோதிகளாகத்தான் இருக்கின்றார்கள்.

தமிழரசுக் கழகத்திலிருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழகத்தை உன்னிப்பாகக் கவனிக்கும்

மத்திய அரசின் கவனத்துக்கு:

அசாமில் சட்டம்-ஒழுங்கு சீர்குலை

கட்டுக்கடங்காத நிலையில் இராணுவம் அழைப்பு

வன்செயல்களில் 25 பேர் பலி -- 13 நகரங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்

ஜோர்ஹப், நவ. 1—

அசாமில் மொழிக் கலவரத்தை அடக்க இராணுவப் படை அழைக்கப்பட்டிருக்கிறது.

சிவசாகர் மாவட்டம் கோலாகாட் பகுதியில் பெருமளவில் கலகம் மூண்டுள்ளது; கிராமங்களிலெல்லாம் வன்செயல்கள் கட்டுக்கடங்காத நிலையில் நடைபெற்றன; கடந்த இரண்டு நாட்களில் மட்டும் ஏற்பட்ட வன்செயல்களில் நான்கு பேர் மாண்டிருக்கின்றனர்.

தீ வைப்பு -- கொள்ளை -- கத்திக்குத்துச் சம்பவங்கள் நடந்ததைத் தொடர்ந்து கோலாகாட் சப்-டிவிஷனில் நவஜான், சபாருபத்துரர் என்ற மேலும் இரு பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இந்தப் பகுதிகளிலிருந்து சிறுபான்மை மொழி பேசும் மக்கள் நூற்றுக் கணக்கில் நவகால் மாவட்ட இரயில் நகரான லும்டிங்குக்கும் மற்ற இடங்களுக்கும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

1960-ல் நடந்த மொழிக் கிளர்ச்சியைவிட இப்போது மோசமாகியிருப்பதாக அதிகாரச் சார்பற்ற வட்டாரங்கள் கூறின.

சம்பவங்களைப் பற்றி மிக எச்சரிக்கையாகவே தகவல் தரும் அரசு வட்டாரங்கள்கூட, 'கோலாகாட் சப்-டிவிஷனின் நிலைமை 'பயங்கரமாக' இருக்கிறது' என்று கூறுகின்றன.

கடந்த மூன்று நாட்களில் மாநிலம் முழுவதிலுமிருந்தும் ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு மாவட்டங்களில் தற்போதைய மொழிக் [illegible]ளர்ச்சியின் விளைவாகக் குறைந்தபட்சம் 25 பேராவது மாண்டிருப்[illegible]ன்று அதிகார வட்டாரங்களே கூறுகின்றன.

அனைத்[illegible] அசாம் மாணவர் சங்கத்தினர், அக். 5-ம் நாள் நடத்திய அர்த்தாலிலிருந்து வன்முறை தலைவிரித்தாடியது.

கலவரப் பகுதிகளில் ரோந்து சுற்ற இராணுவம் அழைக்கப்பட்டது; 13 நகரங்களில் கலவரம் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது; பிறகு நிலைமை சீரடைந்ததன் விளைவாக 5 நகரங்களில் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டது; ஆனால் இராணுவமும் போலீசும் தொடர்ந்து ரோந்து சுற்றுகின்றன.

கழக ஆட்சியைக் கவிழ்க்க புதிய 'யுக்தி'யாம்

புரட்சியாருக்குப் போதகாசிரியராக மாறுகிறார் பக்தவத்சலம்

கேரளத்தில் நடந்த 'இந்திரஜாலம்' இங்கு வெற்றி பெறுமா?

'தந்தி'கள் -- 'மணியார்டர்'கள் பறந்தாலும் தமிழ்நாட்டில் கழகமே ஆளும் கட்சி

ஒரு காலத்தில் கேரளத்தில் குண்டர்களையும் -- கூலிகளையும் ஏவி விட்டு நம்பூதிரிபாடு ஆட்சியைக் கவிழ்த்தது போல், இப்போதும் தமிழகத்தில் உள்ள கழக ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்று இங்கு சிலர் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்று நேற்றல்ல -- தி. மு. க. ஆட்சி ஏற்பட்ட 1967 முதலே அவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்; மாணவர்களை ஏவிவிட்டனர் -- ஆசிரியர்களைக் கிளப்பிவிட்டனர் -- தொழிலாளர்களைத் தூண்டிவிட்டனர் -- விவசாயிகளை வெறியேற்றினர் -- அரசு ஊழியர்களை ஊக்குவித்துப் பார்த்தனர் -- எதுவும் பலிக்கவில்லை; இப்போது 'புதிய கதாநாயகர்' அவர்களுக்குக் கிடைத்திருக்கிறார்! அவரை முன்நிறுத்தித் தங்களுடைய ஆசையைத் தீர்த்துக்கொள்ளலாமா என்ற 'சபலம்' அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது!

யார் என்ன செய்தாலும், பாறையின்மீது மோதியவன் கதிதான் ஆகும் என்பதை அவர்கள் இன்னமும் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை; பேரறிஞர் அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கழகமோ -- கழக ஆட்சியோ, எதிரிகள் நினைப்பது போன்ற அவ்வளவு வலுவற்ற அடிப்படையில் அமைந்திருப்பவையல்ல!

காமராசர் முதல் கைக்கூலி அரசியல்வாதிவரை செய்துபார்த்துத் தோற்றுவிட்ட ஒன்றை, இப்போது, 'புதிய அரசியல் ரிங் மாஸ்டர்' செய்யப் போவதாகச் சவால்விட்டிருக்கிறார்; அவருக்கும் பக்கபலமாக விதூஷகர் பக்தவத்சலம் அடிபெடுத்துக் கொடுக்கிறார்.

"சட்டம் – ஒழுங்கைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பும் மாநில அரசிடம்தான் இருக்கிறது. இதில் மத்திய அரசு தலையிட முடியாது"

என்ற உண்மையை எடுத்துக்காட்டியுள்ளார் பக்தவத்சலம்! முதலமைச்சராக இருந்து -- பிணமலைகளைக் குவித்ததன்மூலம் சட்டம் -- ஒழுங்கைப் பராமரித்து மத்திய உள்துறை அமைச்சரிடம் 'சபாஷ்' பட்டம் பெற்றவரல்லவா அவர்!

"ஆகவே, எந்த கட்டத்தில் இந்திரா அரசு தலையிடவில்லை என்று குறை கூறுவதில் நியாயமில்லை"

என்று கூறிவிட்டு, மத்திய அரசு தலையிடுமாறு செய்ய இங்குள்ளவர்கள் என்ன செய்யவேண்டும் என்ற வழிமுறைகளையும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்!

"சட்டம் -- ஒழுங்கு கெட்டுத் தனி மனிதர் நடமாட முடியாத நிலை ஏற்பட்டால்தான் -- உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டால்தான் மத்திய அரசு தலையிட முழு அதிகாரமும் இருக்கிறது"

என்று கூறிய பக்தவத்சலம்,

"ஆனாலும் மத்திய அரசு மௌனமாக இருப்பதாலேயே சும்மா இருப்பதாக அர்த்தமில்லை. தமிழக நிலைமைகளை அது மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது"

என்றும் கூறியிருக்கிறார்.

அதாவது, தமிழகத்தில் சட்டம் -- ஒழுங்கு குலைந்து, தனி மனிதர்களின் உயிர் .... உடைமைகளுக்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்படுத்த வேண்டியது எதிர்க்கட்சிகளின் இன்றைய அவசர -- அவசியமான கடமை என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறார்!

"தி. மு. க. ஆட்சி மாறவேண்டுமானால் இந்தக் காரியத்தில் உடனே ஈடுபட்டாக வேண்டும்" என்று புதுக்கட்சி ஸ்தாபகருக்கு 'இதோபதேசம்' புரிந்திருக்கிறார்!

அதே நேரத்தில், இன்னொன்றையும் சூசகமாக எதிர்க்கட்சிகளுக்குத் தெரிவித்திருக்கிறார்:—

"மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும் என்று கோருவது அவசியம்தான்; ஆனால், இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளை நாம் மத்திய அரசுக்குத் தெளிவாகக் காட்ட வேண்டும்; உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால், கேரளாவில் நம்பூதிரிபாடு ஆட்சி நடந்தபோது அதன் கோளாறுகளைக் கண்டு கொதித்தமக்கள் தினமும் 100 தந்திவீதம் மத்திய அரசுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள்! அதுபோல் நாமும் மத்திய அரசுக்கு நிலைமைகளைத் தெரிவிக்க வேண்டும்."

பக்தவத்சலத்தின் இந்த யோசனைப்படி, இனி எதிர்க்கட்சிக்காரர்களுடன், 'புதிய கட்சியின் உறுப்பினர்கள்' என்று சொல்லப்படும் 'பதினெரு இலட்சம் (?)' உறுப்பினர்களும் இன்று முதலே 'தந்தி ஆபீஸ்' முன்பு 'கியூ' வரிசையில் நிற்க ஆரம்பித்துவிடக் கூடும்! தந்திக் கட்டணத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை; அதனை அந்தந்த ஊர்க் கிளைகளுக்குப் புதுக் கட்சித் தலைமை நிலையமே மணியார்டர் மூலமோ -- ஆள் மூலமோ மொத்தமாக அனுப்பிவைக்கத் தயங்காது! இதனால் மத்திய அரசுக்கும் தந்தி—மணியார்டர் கட்டணங்கள் மூலம் 'நல்ல வருமானம் கிடைக்கும்!

ஆனால் ஒரு சந்தேகம்; 'தமிழக நிலையை மத்திய அரசு கூர்ந்து கவனித்து வருவதாக'க் கூறிய பக்தவத்சலம், 'மத்திய அரசுக்குத் தந்திகள் அனுப்பவேண்டும்' என்று கூறுவது ஏன்? மத்திய அரசுமீதே அவருக்குச் சந்தேகமா? மத்திய அரசின் புலனாய்வுத் துறையும்--மற்ற அங்கங்களும் நிலைமையைச் சரியாக மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் படைத்தவையல்ல என்று அவர் கருதுகிறாரா?

மக்கள் தந்தி கொடுப்பதன்மூலம்தான் மத்திய அரசு உண்மை நிலையை உணர முடியும் என்றால், மத்திய அரசின் திறமையைப் பக்தவத்சலம் சந்தேகிக்கிறார் என்பதுதான் பொருள்!

மத்திய அரசு கூர்ந்து கவனிக்கிறது என்பது உண்மையானால், சட்டம் -- ஒழுங்கு சீர்குலைந்துவிட்ட நிலையோ, மத்திய அரசு தலையிட வேண்டிய நிலையோ தமிழகத்தில் உருவாகவில்லை என்பதுதான் உண்மை. மத்திய அரசு எவ்வளவுதான் கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு கூர்ந்து கவனித்தாலும், இத்தகைய குற்றச்சாட்டுக்குத் தமிழக அரசு ஆளாகாது என்பது உறுதி!

மத்திய அரசு பக்தவத்சலத்தையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டுதான் வருகிறது; எனவேதான், மத்திய அரசின் இலாகாக்களின் கண்காணிப்பை நம்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு பக்தவத்சலம் வந்துவிட்டார்!

தமிழகத்தில் ஏதோ -- 'இந்தி எதிர்ப்புக் காலத்தில் பக்தவத்சலம் ஆட்சி நடந்ததைப்போல, இப்போது நடப்பது போலவும், மக்கள் உயிர் -- உடைமைக்கு அஞ்சித் தத்தளிப்பதுபோலவும் சித்தரித்து மத்திய அரசுக்குத் தந்தி கொடுக்கச் சொல்கிறார் பக்தவத்சலம்!

கேரளத்தில் நம்பூதிரிபாடு ஆட்சியைக் கவிழ்க்க என்னென்ன சக்திகள் வேலை செய்தன என்பதும், இன்றைய தலைமையமைச்சரான இந்திரா காந்தியே அன்று முன்னின்று ஆட்சிக் கவிழ்ப்புப் பணியை முடுக்கிவிட்டதையும் நாடு நன்கு அறியும். அன்று வன்செயல்களால் கவிழ்க்கப்பட்ட அதே நம்பூதிரிபாடுதான் -- மீண்டும் அதே கேரளத்து மக்களின் பேராதரவுடன் ஆட்சியில் அமர்ந்தார் என்பதையும் நாடு இன்னும் மறந்துவிடவில்லை!

தந்திகள்" மூலம் இன்று கழக ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்றால், செய்துபார்க்கட்டுமே! கழக ஆட்சிக்கு எதிராக நூறு தந்திகள் என்றால், ஆதரவாக பல்லாயிரம் தந்திகள் அனுப்பத் தமிழ்நாட்டில் மக்கள் உண்டு!

பக்தவத்சலங்களின் பேச்சை நம்பிக்கொண்டு, தமிழகத்தின் பெருவாரியான மக்களாதரவுடன் இயங்கும் கழக ஆட்சியைக் கவிழ்க்க இந்திரா காந்தி ஒருபோதும் துணியமாட்டார் என்பது மட்டும் உறுதி!

முடியுமானால் -- துணிவிருந்தால், இந்திரா காந்தி அந்தக் காரியத்தைச் செய்து பார்க்கட்டும்; ஆனால் ஒன்று -- கழக ஆட்சி கவிழ்க்கப்பட்டு அடுத்த ஆறு மாதங்களுக்குப்பின் ஒரு பொதுத் தேர்தலைத் தமிழ்நாடு சந்தித்துத்தான் தீரவேண்டும்; அப்போது, காமராசரோ -- பக்தவத்சலமோ -- மோகன் குமாரமங்கலமோ -- சி. சுப்பிரமணியமோ தமிழ்நாட்டின் முதலமைச்சராகிவிடலாம் என்றும் கனவிலும் கருதவேண்டாம்; அவர்களுக்கெல்லாம் துணைபோகத் துணிந்துவிட்ட 'புதுக் கட்சி ஸ்டண்ட் மாஸ்டரு'க்கும் அந்த வாய்ப்பைத் தமிழக மக்கள் தந்துவிடப் போவதில்லை!

இனித் தமிழகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர ஆளும் கட்சி ஒன்று உருவாக வாய்ப்பில்லை என்பதை மட்டும் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மா. செ.

கடலுக்கு அடியில் இரயில் பாதை

பிரிட்டன் -- பிரான்சு இணைப்பு முயற்சி

35 கோடி பவுன் செலவாகும்

இலண்டன், அக். 25—

பிரிட்டன் -- பிரான்சு நாடுகளைக் கடல் அடி இரயில் பாதை மூலம் இணைக்கும் முயற்சிகளை இரு நாடுகளும் மேற்கொண்டுள்ளன.

இரு நாடுகளையும் இணைக்கும் ஆங்கிலக் கால்வாயில், தண்ணீருக்குக் கீழே குழாய்ப் பாதை அமைத்து-- அதில் இருவழி இரயில் போக்குவரத்திற்குவகைசெய்வதே புதிய திட்டமாகும்.

பிரிட்டன் -- பிரான்சு இடையே அமையும் இந்த இரயில் பாதையின் மொத்த நீளம் 39 மைல்கள்; இதில் குழாய்ப் பாதை மட்டும் 33 மைல்களுக்குப் போடப்படும்; 23 மைல் குழாய்ப் பாதை கடலுக்கு அடியே அமையும்.

அதிவேக இரயில் பாதையாக விளங்கக்கூடிய இந்த கடல் அடி இரயில் பாதை அமைக்க சுமார் 35 கோடி பவுன்கள் இன்றைய மதிப்பில் ஏறக்குறைய ரூ. 600 கோடி செலவாகும் என்று ஒரு மதிப்பீடு கூறுகிறது.

புதிய தொழில் உரிமங்கள்

1972 ஆகஸ்டு 19-ம் நாளுடன் முடிவடைந்த இரண்டு கிழமைகளில் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்காக 18 தொழில் நிறுவனங்களுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டன; இதே காலத்தில் 15 பூர்வாங்க அனுமதிக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

பத்து சதவிகிதத்தினரே திட்டப் பயனை அனுபவிப்பதா?

பொருளாதார நிபுணர் தாண்டேகர் தரும் கணக்கு

பம்பாய், அக். 31—

"குறைந்தபட்ச ஊதியம் நாட்டிலுள்ள அனைவருக்கும் கிடைக்கும்படி செய்வதே அரசின் திட்டக் கொள்கையாக இருக்க வேண்டும்"

என்று, பிரபல பொருளாதார நிபுணரான டாக்டர் வி. எம். தாண்டேகர் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இப்போது திட்டமிடுதலே முக்கியமாகக் கருதப்படுகிறது; உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் செலவாகுமா என்று கவனிக்கப்படுவதில்லை.

இன்று தொழிற்சாலை உற்பத்தி என்பது குறிப்பிட்ட ஒரு பகுதியினரின் தேவைகளுக்குப் பயன்படுகிறது; அதாவது, உயர்தர வருமானக்காரர்கள் -- கட்டுப்பாடாகத் தொழிற் சங்கங்கள் அமைத்துக் கொண்டுள்ள தொழிலாளர் ஆகியோரே பயன்பெறுகின்றனர்; இவர்கள் பத்துச் சதவிகிதத்தினர்தான்; ஆனால், பொருளாதாரம் முழுவதையும் இவர்கள் தமது சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர்."

மின்சாரப் பற்றாக்குறை எதிரொலி

திரைப்படக் காட்சிகளின் எண்ணிக்கை குறையும்?

நிலைமைபற்றி அரசு பரிசீலனை

தமிழ்நாடு முதலமைச்சர் விளக்கம்

சென்னை, நவ. 2—

"மின்சாரப் பற்றாக்குறை நெருக்கடியைச் சமாளிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய பெங்களூரில் நடைபெற்ற மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் சில யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன; அவை, அரசின் பரிசீலனையில் இருக்கின்றன"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இதன் தொடர்பாகச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"பெங்களூரில் நடந்த மின்சார அமைச்சர்கள் மாநாட்டின் காரணமாகத் தமிழ்நாட்டுக்கு ஏதாவது அதிகப்படியான மின்சாரம் கிடைக்குமா? அல்லது மின்சார வெட்டு அதிகரிக்குமா?"

பதில்:—"அதன் முடிவாக ஆடம்பரமான மின்சார செலவுகளைக் குறைக்கும்படி முடிவு செய்யப்பட்டிருக்கிறது; திரைப்படக் காட்சிகள் சிலவற்றை ரத்து செய்யுமாறும் கூறப்பட்டிருக்கிறது: இதுபற்றியும் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

"மத்திய அமைச்சர் கே. எல். ராவ், பெங்களூரிலிருந்து சென்னைக்கு வந்து எண்ணூர் அனல் மின் நிலையத்தைப் பார்வையிட்டார்; இந்த நிலையத்தின் மின்சார உற்பத்தித் திறனை 600 மெகவாட்டிலிருந்து 1,000 மெகவாட்டாக உயர்த்தும் சாத்தியக்கூறு இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்; அதற்காகக் கடல் நீரைக் கொண்டு வருவதில் சிறு சங்கடம் இருக்கிறது என்றாலும், வேறு வழிகளில் அவற்றை நிறைவேற்ற முடியும் என்று சொல்லியிருக்கிறார்."

கேள்வி:—"கேரளத்திலிருந்து அதிகப்படியான மின்சாரம் பெற வழியிருக்கிறதா?"

பதில்:—"கேரளத்தின் உபரி மின்சாரத்தைக் கேட்டிருக்கிறோம்; அதுபற்றி நவம்பர் 10-ந்தேதிக்கும் பிறகுதான் தெரியும்."

கேள்வி:—"மின்சார வெட்டு அதிகரிக்குமா -- குறையுமா?"

பதில்:—"10-ந் தேதிக்குப் பிறகுதான் தெரியும்."

பொதுக்கூட்டப் பிரச்சினை

கேள்வி:—"திரைப் படக் காட்சிகளை ரத்து செய்வதால் அரசாங்கத்துக்கு வருமானம் குறையக் கூடுமேயானதால், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து மின்சாரப் பற்றாக்குறையைச் சுட்டிக்காட்டி -- கொஞ்ச நாளைக்காவது பொதுக்கூட்டங்கள் நடத்தாதிருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுமா?"

பதில்:—"பொதுக் கூட்டங்கள் போடுவதை நிறுத்த வேண்டியதில்லை; பொதுக்கூட்டங்களில் கலகம் செய்வதை நிறுத்தினால் போதும்; பொதுவாகப் பொதுக் கூட்டம் நடத்துகின்றவர்கள், 'ஜெனரேட்டர்' இயந்திரத்தின் மூலம் மின்சார உற்பத்தி செய்து கொள்கிறார்கள்."

நெய்வேலி மின்சாரம்

கேள்வி:—'நெய்வேலி மின்சார இயந்திரத்துக்கு 'பர்னஸ் எண்ணெயைப் பயன்படுத்தி முழு அளவு மின்சார உற்பத்தி செய்யப்போவதாக மத்திய அமைச்சர் சொல்லியிருந்தாரே -- அது பற்றியும் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா?"

அமைச்சர் ஓ. பி. இராமன்:— அதுபற்றியும் சொல்லியிருக்கிறோம்: அந்த எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது; அதுபற்றி ஏற்பாடு செய்வதாகவும் மத்திய அமைச்சர் கே. எல். ராவ் சொல்லியிருக்கிறார்.

கேள்வி:—"நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவது பற்றி வற்புறுத்தப்பட்டதா?"

அமைச்சர் ஓ. பி. இராமன்:— "அதுபற்றியும் சொல்லியிருக்கிறோம்."

புறப்பட்டுவிட்டார் புதிய 'கதாநாயகர்'

வெடித்தெழப் போகிறது புதுமை--புரட்சி--பூகம்பம்

அண்ணா அறவழி காப்போம் --- அராஜகவாதிகளை உலகிற்கு அம்பலப்படுத்துவோம்

திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் -- தி. மு. கழக ஆட்சியும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளதாகப் புதுக் கட்சி கண்ட 'புதிய அரசியல் கதாநாயகர்' பழிசுமத்திப் பேசியும், 'பத்திரிகையாளர் சிறப்புப் பேட்டி'களில் சொல்லியும் வருகிறார்; பற்றாக்குறைக்கு, ஆளுநரிடமும் மகஜர் கொடுக்க 'மாபெரும் மக்கள் ஊர்வலம்' நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்;

வன்செயல்களில் ஈடுபடுவோர் யார் -- வன்செயல்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து அமைதி காக்க அரும்பாடுபட்டு வருபவர்கள் யார் என்பதை, நாட்டு மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

கடந்த மாதம் பத்தாம் தேதியிலிருந்து இன்றுவரை தமிழ்நாட்டில் கழகப் பொதுக்கூட்டங்களும் நடைபெற்று வந்திருக்கின்றன; புதுக் கட்சி ஸ்தாபகரை ஆதரித்தும் பொதுக்கூட்டங்கள் நடந்துவருகின்றன!

இவற்றில் குழப்பம் -- கல்வீச்சு -- வன்செயல்கள் ஆகியவற்றிற்கு இலக்கான கூட்டங்கள் எவை -- அமைதியாகவும், எத்தகைய இடர்ப்பாட்டுக்கும் இலக்காகாமல் நடைபெற்று முடிகின்ற கூட்டங்கள் எவை என்பதைக் கவனித்தால் உண்மை புரியும்.

புதுக் கட்சி ஸ்தாபகரின் ஆட்களாலும் -- அவர்தம் ஆதரவாளர்கள் எனப்படுவோராலும் நடத்தப்பெறும் கூட்டங்களில் ஏதேனும் ஒன்றிலாவது கூச்சலோ -- குழப்பமோ -- கல்வீச்சோ நடைபெற்றிருக்கிறதா? அவை அமைதியாக நடைபெறுகின்றன என்பதாலேயே, அந்தக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களிலெல்லாம் தி. மு. கழகத் தோழர்களோ, புதுக் கட்சிக்கு மாறுபட்ட கருத்துடையவர்களோ இல்லை என்று பொருளா?

குண்டர்களின் வன்செயல்களுக்கும் -- கல்வீச்சுக்கும் இலக்காகும் கூட்டங்கள் அனைத்தும் தி.மு.க. கூட்டங்களாகவே இருக்கக் காரணம் என்ன?

தி.மு.க. கூட்டம் எங்கு நடந்தாலும், அதைத் தடுப்பது -- கல்வீசுவது--வன்முறைகளைக் கையாண்டு கூட்டத்தை நடத்தவொட்டாமல் செய்வது என்பதை முழு முதல் கொள்கையாக -- செயல் திட்டமாகப் புதுக் கட்சியினர் கொண்டிருப்பதன் விளைவு அல்லவா இது?

இதேபோல், புதுக் கட்சியினர் நடத்தும் கூட்டங்களையெல்லாம் கலைப்பது -- தடைப்படுத்துவது என்பது தி. மு. கழகத் தோழர்களால் இயலாத ஒன்றா? எந்த ஊரிலாவது புதுக் கட்சிக் கூட்டத்தில் தி. மு. கழகத்தவர் குழப்பம் விளைவித்ததாகத் தகவல் உண்டா? அது அண்ணாவின் அறவழிக்குப் புறம்பானது என்பதால்தான், 'எதையும் தாங்கும் இதயத்துடன்' நமது கழகத் தோழர்கள் -- எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு அமைதி காக்க முயன்று வருகின்றனர்.

தி. மு. கழகத்தவர்தான் வன்செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்றால், தமிழ்நாட்டில் புதுக் கட்சிக்காரர்களால் ஒரு பொதுக்கூட்டமாவது வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்க முடியுமா?

கல்வீச்சுக்கு ஆளாகின்றவர்கள் கழகத் தலைவர்கள் -- அமைச்சர்கள் -- மற்றுமுள்ள கழகச் சொற்பொழிவாளர்கள்!

கழகத் தலைவர்களின் கார்கள் இடைமறிக்கப்படுவதும், தீ வைத்துக் கொளுத்தப்படுவதும், கழகச் செயல் வீரர்களின் வீடுகள் தாக்குதலுக்குள்ளாவதும் அன்றாட நிகழ்ச்சிகளாக உள்ளன.

ஆனால், வன்செயல்களைத் தூண்டிவிட்டு -- அது வெற்றிகரமாக நடைபெறுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பவர்கள் கூறுகிறார்கள் -- தி. மு. கழகத்தவர் வன்செயலில் ஈடுபட்டிருப்பதாக!

கூட்டத்தில் நுழைந்து கலவரம் விளைவி[illegible] தடுத்து அமைதி நிலைநாட்ட வரும் காவல்துறையினர்மீது கல்வீச்சு -- காவல் நிலையத்தின்மீது தாக்குதல் -- இத்தனையும் நடைபெற்றபிறகு தற்காப்புக்காகச் சுட்டால், அதற்குப் பெயர்--தி. மு. கழக ஆட்சியின் வன்முறை -- மக்கள் விரோதச் செயல்!

அவர்கள் கூற்று உண்மையாக இருக்குமானால் -- மக்கள் விரோத ஆட்சிதான் இங்கு நடைபெறுகிறது என்றால், தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு எதிராக இத்தனைக் கூட்டங்கள் நடைபெற முடியுமா?

தி. மு. கழகத்தில் இருப்பவர்களெல்லாம், 'கேடி'கள் -- 'ரௌடி'கள் என்றால், இப்படிச் சொல்லுபவர்களின் கூட்டம் ஒன்றாவது அமைதியாக நடைபெற முடியுமா?

தாக்கப்படுபவர்கள் வன்செயலாளர்கள் -- தாக்குபவர்கள் அறவழியில் அரசியல் நடத்துபவர்கள் என்றால், இது எந்த இலக்கணத்துக்குப் பொருந்தும்?

"தி. மு. கழகக் கூட்டம் எங்கு நடந்தாலும் அதைத் தடுப்போம் -- தி. மு. கழகத்தவர் செல்லும் கார்களை வழிமறித்துத் தீ வைத்துக் கொளுத்தவோம்; தனிப்பட்டவர் உடைமையானாலும் -- அரசு உடைமையானாலும் சேதப்படுத்தத் தயங்கமாட்டோம்; அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுப்பது சனநாயக விரோதச் செயல் -- சர்வாதிகாரம் -- வன்முறை" என்று கூறும் ஒருவர், ஒரு கட்சிக்குத் தலைமை வகித்து அரசியல் நடத்தத் துணிந்திருப்பதுகூட வியப்பில்லை; அப்படிப்பட்ட ஒருவர், பேரறிஞர் 'அண்ணா அவர்களின் அறவழியில் புனிதப் போர் தொடங்கியிருக்கிறேன்' என்று கூறுவதுதான் வியப்பிலும் வியப்பாக உள்ளது!

இதுவரை நடத்திய திருவிளையாடல்களுடன் புதுக் கட்சி ஸ்தாபகர் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை; அவருடைய தூண்டுதல் காரணமாக ஏற்பட்ட கலவரத்தில் ஒரு பிணம் விழுந்தும்கூட, வன்முறை வெறியைத் தணிக்க விரும்புபவராகத் தென்படவில்லை; தமிழ்நாடு முழுவதும் அராஜகத்தைத் தூண்டிவிட்டு -- அதன் விளைவாகப் பல பிணங்கள் விழுந்தால்தான் தனது ஆசை நிறைவேறும் என்று நம்புகிறார்!

நவம்பர் பத்தாம் தேதி நாட்டையே ஸ்தம்பிக்க வைக்கப் போகிறாராம்! இதுதான் பேரறிஞர் அண்ணாவிடமிருந்து அவர் கற்றறிந்த அறவழியானால், அந்த வழி தமிழகத்துக்கே தேவையில்லை! அண்ணா அவர்கள் தமிழ்மக்களுக்குப் போதித்த அறவழி இதுவல்ல!

அண்ணாவின் பெயரைச் சூட்டிக்கொண்டு கட்சி நடத்தும் 'வேடதாரிகளை' அடையாளம் கண்டு கொள்ள தமிழ்மக்களுக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது; வருகிற நவ. 10-ஆம் தேதி அவர்களின் முகத் திரையைக் கிழித்தெறியத் தமிழ் மக்கள் தயாராக இருக்கவேண்டும்.

இம்மியளவும் அண்ணாவின் அறவழியிலிருந்து பிறழாமல் — எவ்வளவுதான் எரிச்சலூட்டப்பட்டாலும் பொறுமை இழந்துவிடாமல் அமைதியுடன் இருந்து, அராஜகவாதிகள் யார் என்பதை உலகம் அறிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டியது நமது கழகத் தோழர்களின் கடமையாகும்.

உண்மை என்றும் தோற்றதில்லை -- பொய்யும் புரட்டும் என்றும் வென்றதில்லை!

அண்ணாவின் பெயருக்கே இழுக்குத் தேடும் வன்செயலாளர்களை அண்ணாவின் அறவழியாலேயே வெல்வோம்!

[illegible] பெயரால் நமது தேசிய

பத்திரிகைகட்கு மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்ட நிலைமை விளக்கம்

பத்திரிகைக்கு மின்சார இணைப்புத் துண்டிக்கப்பட்டது பற்றிச் செய்தியாளர்கள் கேட்டபோது முதலமைச்சர் விளக்கியதாவது:—

"'நவசக்தி' பத்திரிகைக்கு அக்டோபர் 31-ந் தேதி மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டது; அதிகாரிகள் வழக்கம்போல் செய்யும் முறையில் செய்துவிட்டார்கள்; அதுபற்றி எனக்குத் தகவல் எதுவும் கிடையாது; நானே மேலவை எதிர்க் கட்சித் தலைவர் இராஜாராம் நாயுடுவுடன் தொடர்பு கொண்டு, 'என்னுடைய கவனத்துக்கோ, மின்சார அமைச்சர் ஓ. பி. இராமன் கவனத்துக்கோ வராமலேயே இது போன்று நடந்திருக்கிறது; அதிகாரிகள் அளவில் செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்; உடனேயே மின் இணைப்புக் கொடுக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்தேன்; மின் இணைப்பும் கொடுக்கப்பட்டுவிட்டது' என்று தெரிவித்தேன்.

'நவசக்தி'யைப் போன்று 'நவமணி' பத்திரிகைக்கும் நேற்று மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டிருக்கிறது; அதற்கும் இப்போது மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

தத்து எடுக்கப்படும் குழந்தைகள்

பாதுகாப்புக்குப் புதிய மசோதா

புதுடில்லி, அக். 31—

குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்வது பற்றிய 1972-ம் ஆண்டு மசோதாவை சட்டமாக்குவதற்கு முன்னால், நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் சேர்ந்த கூட்டுக் குழுவிடம் இந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பொதுமக்கள் மனுக் கொடுப்பதற்கான இறுதி நாள் 1972 நவம்பர் 10-ந் தேதிவரை ஒத்திப்போடப்பட்டிருக்கிறது.

இந்த மசோதா சம்பந்தமாகத் தங்கள் கருத்துக்களை வாய்மூலமாகக் கூற விரும்புபவர்கள், அதுபற்றி மனுவில் குறிப்பிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த மசோதா சட்டமாக்கப்பட்டவுடன், 1956-ம் ஆண்[illegible] இந்துக் குழந்தை தத்[illegible] மரிப்புச் சட்டத்தின் [illegible]ழந்தை தத்து பற்றிய வி[illegible]ளுக்கும் -- குழந்தைகளைத் தத்[illegible] எடுத்துக் கொள்வது பற்றி [illegible]வழியாகப் பின்பற்றப்பட்டு [illegible] சட்டங்களுக்கும் பதிலாக [illegible]ந்தப் புதிய சட்டங்கள் நடைமுறைக்கு வரும்.

எல்லாச் சமூகத்தினருக்கும் ஒரே விதமான தத்துச் சட்டம் நடைமுறையில் இருப்பதற்கு இந்த மசோதா வகை செய்கிறது.

சட்டபூர்வமான திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தைக்குக் கிடைக்கக்கூடிய சமூகத் தகுதி கிடைக்குமானால், ஏதாவது ஒரு குழந்தையை -- அதன் நன்மையை முன்னிட்டுத் தத்து எடுத்துக்கொள்வதற்கு இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

தத்து எடுத்துக்கொள்ளப்பட்ட குழந்தைகளை அலட்சியம் செய்யாமலிருப்பதற்கும், கொடுமைப்படுத்தாமல் இருப்பதற்கும் இந்த மசோதா மூலம் வழி ஏற்படும்.

இந்தியக் குழந்தைகளை வெளிநாட்டவர்கள் தத்து எடுத்துக் கொண்டு வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கும் இம்மசோதா அனுமதி அளிக்கிறது.

மாற்றுக் கட்சி ஏடுகளின் பொய்ப் பிரசாரம்

உதகை நகர தி.மு.க. செயலாளர் கண்டனம்

உதகை, அக். 29—

உதகை நகர தி.மு.க. செயலாளர் தி. செயராமன் அறிவிப்பதாவது:—

"நான் தி. மு. கழகத்திலிருந்து விலகிவிட்டதாகச் செய்தி வெளியிட்டுத் தங்களுடைய ஒரு நாள் மகிழ்ச்சியைத் தங்களை ஆதரிப்பவர்கட்குத் தந்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

22—10—72 அன்று உதகையில் நடைபெற்ற பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டத்தில், 'முன்பு இருந்ததைவிட கட்டுக்கோப்போடு கழகத்தைக் கட்டிக்காத்து அண்ணா வழி நடப்போம்' என்று உறுதி ஏற்றுக் கொண்டேன்; கழகத்திலிருந்து விலக வேண்டும் என்ற எண்ணம் இதயத்தின் ஒரு மூலையிலேகூட உதிக்கவில்லை.

இப்படியிருக்க, 'நவ இந்தியா', 'இந்து' இதழ்களில் (28—10—72) நான் விலகிவிட்டதாகச் செய்து வெளியிட்டுள்ளனர்.

எனக்குக் கருத்துத் தெரிந்த நாள் முதல் நான் ஏற்ற அரசியல் கட்சி தி. மு. கழகம் ஒன்றே! எனது இதயத்திலிருக்கும் தலைவர் அறிஞர் அண்ணா ஒருவரே! இன்று அவர் வழி நின்று அயராது உழைக்கும் கலைஞர் அவர்களின் வழிநின்று கழகத்தைக் கட்டிக் காப்பதே எனது கடமை!

கலைஞரைவிட — நாவலரைவிட — பேராசிரியரைவிட — நாவன்மை மிக்க நல்லோர்களும் பல்லாயிரக்கணக்கான கழகக் கண்மணிகளும் ஒரே [illegible]மாக இணைந்துள்ள இயக்க[illegible]தி. மு. கழகத்தைவிட வே[illegible]இயக்கம் ஏது?

தமிழகத்தில் தமிழ் காக்க— ஏழையர்க்கு வாழ்வளிக்க—நடுத்தர வர்க்கத்தினரைப் பாதுகாக்க— புரட்சிமிகக திட்டங்களை வகுக்க வேறு யார் இருக்கிறார்கள் இந்த நாட்டில்!

ஆட்சியிலே இருந்தாலும் -- கவிழ்க்க நினைப்போர் எண்ணம் ஈடேறி எதிர்க் கட்சியானாலும் -- நான் சார்ந்துள்ள இயக்கம் தி. மு. கழகம் ஒன்றே!

தி. மு. கழகக் கட்டுப்பாட்டை மீறிய உதகை தி. மு. கழகத் தோழர்கள் பா. வெள்ளையன், சா. வடிவேலு, எம். எம். சங்கர் ஆகியோர், நீலகிரி மாவட்டச் செயலாளர் கே.பி. முருகேசன்-- உதகை வட்டச் செயலாளர் ஆர். இராசு ஆகியோர் ஆலோசனையின் மீது தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

சட்டபூர்வக் கருச் சிதைவு

ஐந்து மாதங்களில் ஏற்பட்டுள்ள பயன்

இந்தியாவில் இரண்டாவதாகத் தமிழ்நாடு இடம் பெறுகிறது

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்காகச் சட்டபூர்வமாகக் கருச்சிதைவு செய்துகொள்ளலாம் என்று மத்திய அரசு கடந்த ஏப்ரல் மாதத்தில் சட்டம் செயலுக்கு வந்தது; அந்தச் சட்டத்தின்கீழ் ஏப்ரல் முதல் ஆகஸ்டு முடிய 5 மாதங்களில் இந்தியா முழுவதிலும் 5,467 பெண்கள் சட்டபூர்வமாகக் கருச் சிதைவு செய்து கொண்டிருக்கின்றனர்.

மாநிலங்களைப் பொறுத்தவரையில், மராட்டிய மாநிலம் முதல் இடத்தையும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் பெறுகின்றன.

மராட்டிய மாநிலத்தில், ஆகஸ்டு மாதம் முடிய 1 544 பெண்கள் கருச்சிதைவு செய்து கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 1,454 பெண்கள் கருச் சிதைவு செய்து கொண்டனர்.

டில்லியில் கருச்சிதைவைச் செய்துகொண்ட பெண்களின் எண்ணிக்கை 654.

கருச் சிதைவு செய்துகொண்டவர்களில் 94.70 சதவீதத்தினர் நகர்ப்புறப் பெண்கள்; கிராமப் பெண்கள் 5.30 சதவீதத்தினர்.

பெரும்பாலான பெண்கள், கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தி அதில் தோல்விகண்டதால் கருச்சிதைவு செய்து கொள்கின்றனர்.

வன்முறைகளை அடக்கவே நடவடிக்கை

'வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்ற எண்ணம் வேண்டாம்'

'அறிக்கைத் தலைவரின்' அர்த்தால் மிரட்டல்— முதலமைச்சர் கலைஞர் எச்சரிக்கை

சென்னை, நவ. 2—

'ஒட்டுக் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் நடத்தப்போவதாக அறிவித்துள்ள 'அர்த்தாலை'யொட்டி, 'மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கு அமைதி ஆகியவைகளுக்கு ஊறு நேரிடாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது' என்று குறிப்பிட்டுச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறியதாவது:—

"சட்டம்—ஒழுங்கு அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கின்றவர்கள்— இதைக் கெடுப்பவர்கள் யாராக இருந்தாலும் போலீசார் தங்களுக்கு உரிய கடமைகளின்படி நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள்; 'வன்முறைகளை அடக்கவேண்டும்' என்ற கண்ணோட்டத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறதேயல்லாமல், அரசியல் கண்ணோட்டம் எதுவும் இதில் இல்லை; 'அர்த்தால்' நடைபெறுமானால் அதனையொட்டி வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்காதபடி அமைதியை நிலைநாட்ட நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள் போராட்டத்தின் போது சில கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்தினார்கள்; அதன் தொடர்பாகச் சில கிளர்ச்சிகள் நடைபெற்றன; அதிலும் வன்முறை தலைகாட்டியபோது, சட்டம்—ஒழுங்கைக் காப்பாற்றுவதற்கும் போலீசார் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்; பிறகு பேச்சுவார்த்தையின் தொடர்பாக வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன.

இப்படி ஒவ்வொரு தடவையும், 'வழக்குகள் திரும்பப் பெறப்படும்' என்று எண்ணிக்கொண்டு வன்முறைப் போராட்டங்களில் யார் இறங்கினாலும், அதை அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது"

கேள்வி:— "13-ம் நாளன்று சட்டமன்றம் கூடும்போது கோட்டைக்கு எதிரே பேரணி நடத்தப் போவதாகக் கம்யூனிஸ்டுக் கட்சியினர் சொல்லியிருக்கின்றனரே?"

பதில்:— "அவர்கள் அறிக்கை தானே விட்டிருக்கிறார்கள்? கம்யூனிஸ்டுக் கட்சியின் மாநில நிர்வாகக் குழு கூடி அம்மாதிரி முடிவு எதுவும் எடுத்ததாகத் தகவல் இல்லை; எனவே, அவர்கள் (கம்யூனிஸ்டு கட்சியினர்) நிர்வாகக் குழுவைக் கூட்டி முடிவு செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

ஆனால், இவருடைய (எம். ஜி. ஆர்.) கட்சிக்கு அம்மாதிரி அமைப்பு ஒன்றும் இல்லையே; அவர் மட்டும்தானே அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்?"

விஞ்ஞான அடிப்படையில் தோட்டங்கள்

கல்வியமைச்சர் நாவலர் யோசனை

சென்னை, அக். 31—

அடையாற்றில் தோட்டக் கலைக் கழகத்தின் புதிய கட்டடத்தைக் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.

நமது நகரங்கள் அழகுடன் விளங்கும்படிச் செய்வதற்கு விஞ்ஞான அடிப்படையில் உருவாக்கிய தோட்டங்களையே வளர்க்க வேண்டியதன் அவசியத்தையும், அதே நேரத்தில் காய்கறிகள்—பழங்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இக்கழகத்தில் தோட்டக் கலையில் பயிற்சி பெற்ற முதல் குழுவைச் சேர்ந்த 11 மாணவர்களுக்கு அமைச்சர் சான்றிதழ்களை வழங்கினார்.

இக்கழகத்தின் முதல்வர் இந்திரா சென் அனைவரையும் வரவேற்றார்.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் பி. சிவலிங்கம் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்தார்.

மத்திய பாலிடெக்னிக் முதல்வர் கே. மாயன் நன்றி கூறினார்.

காவல் துறைப் பணிக்கு மகளிர்

கருநாடக மாநிலத்தில் ஏற்பாடு

பெங்களூர், நவ. 1—

மைசூரில் ஒவ்வொரு போலீசு நிலையத்திற்கும் பெண் போலீசாரை நியமிக்க ஏற்பாடு நடந்து வருகிறது.

"பெண் போலீசாக நியமிக்கப்படும் பெண்கள், போலீசு நிலையங்களில் வரவேற்பாளர்களாகப் பணியாற்றுவார்கள்.

போலீசு நிலையத்துக்கு வருபவர்களிடம் அன்பாகப் பேசி— அவர்கள் வந்த காரியத்துக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

இது தவிர, புலன் விசாரணைக்காகவோ அல்லது துப்புக் கண்டு பிடிக்கவோ போலீசு அதிகாரிகள் வெளியே செல்லும் சமயங்களில் வழக்குகளைப் பதிவு செய்ய சப்-இன்ஸ்பெக்டர் தரத்திற்குக் குறைவில்லாத அதிகாரிகள் நியமிக்கப் படுவார்கள்.

வழக்குகளைப் பதிவு செய்வது மட்டுமே அவர்களது பணியாக இருக்கும்.

ஆந்திர மாநில தி. மு. கழகம்

தலைமைக் கழக முடிவுக்கு ஆதரவு

ஏகாம்பரக்குப்பம், அக். 31—

"திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழு—பொதுக்குழு ஆகியவைகள் எம். ஜி. ஆர். தொடர்பாக மேற்கொண்ட முடிவினை முழு மனத்துடன் ஆந்திர மாநில தி. மு. கழகம் ஆதரிக்கிறது"

என்று ஆந்திர மாநில தி. மு. கழக அமைப்பாளர் வே. ஜி முருகேசன் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வரைமுறையோடு அரசியல் நடத்தும் கலைஞரா சர்வாதிகாரி?

சேலம், அக். 31—

"அரசியலை வரை முறையோடு நடத்த வேண்டும்; கலைஞரைப் போல் வரை முறையோடு அரசியல் நடத்தும் தலைவர் வேறுயார் இருக்கிறார்கள்? இருபத்து நான்கு மணி நேரமும் நாட்டுக்காக—மக்களுக்காக உழைத்துவரும் அவரை, 'ஒழிக' என்று சிலர் கூச்சல் போடுகிறார்கள்.

அண்ணா அவர்கள் இறந்தபோது, 'அவரது உடலை எரித்துவிட வேண்டும்' என்று [illegible]து இல்லத்தார் சொன்னபோது, 'இல்லை, இல்லை; [illegible] நாட்டின் சொத்து; அவரை எரியூட்டக் கூடாது; [illegible]ப் பேழையில் வைத்து நினைவாலயம் எழுப்ப வேண்டும்' என்று சொல்லி—வங்கக் கடற்கரையில் அழியாத நினைவாலயம் எழுப்பியவர் கலைஞர்!

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் நகரில் கென்னடிக்குக் கட்டப்பட்டுள்ள கல்லறையைப் பார்த்திருக்கிறேன்; பர்மாவில் ஐராவதி நதிக் கரையில் பர்மிய நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட அவுங்சான் கல்லறையைப் பார்த்திருக்கிறேன்; அண்ணல் காந்தியடிகள்—நேரு—சாஸ்திரி போன்றவர்களின் கல்லறைகளை எல்லாம் பார்த்திருக்கிறேன்; ஆனால், அவற்றையெல்லாம்விட அழகான நினைவாலயத்தை, உலகத்தின் இரண்டாவது எழில்மிகு கடற்கரையில் எழுப்பியப் பெருமை கலைஞர் ஒருவருக்குத்தான் உண்டு!

கலைஞரை, 'சர்வாதிகாரி' என்கிறார்கள்; சர்வாதிகாரியாக அவர் இருந்திருந்தால், குருச்சேவைப்போல் நடந்து கொண்டிருப்பார்; ஸ்டாலின் படத்தையும் சிலைகளையும் அகற்றியவர் குருச்சேவ்; அதுபோல் கலைஞர் செய்தாரா?

அண்ணாவின் பெயரால் இந்த நாட்டில் எத்தனைக் கல்லூரிகள்—பூங்காக்கள்—திருமண மண்டபங்கள் இருக்கின்றன என்பதை நாடு அறியாதா?

அண்மையில் சென்னையில் கலைஞர் கருணாநிதி நகரில் அமைக்கப்பட்ட ஒரு திருமண மண்டபத்திற்கு, 'என்ன பெயர் வைக்கலாம்' என்று கலைஞரிடம் [illegible]கேட்டபோது, 'இராணி அண்ணா திருமண மண்டபம்' என்று பெயர் வைக்கச் சொன்னவர் கலைஞர்; அவரைப் பார்த்தா [illegible]வாதிகாரி என்பது?

ஆதிக்க இந்தி[illegible] எதிர்த்துத் தனிமைச் சிறையில் இருந்த கலைஞரி[illegible] மானம் காக்கத் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்த தலைவரின் வழி நடக்க நாமெல்லாம் சூளுரை எடுத்துக் கொள்ள வேண்டும்."

—அமைச்சர் க. இராசாராம்

(சேலம் பொதுக்கூட்டத்தில்)

நிதிப் பற்றுக்குறையுள்ள ஊராட்சி ஒன்றியங்கட்கு கூடுதல் மானியம்

அமைச்சர் நாவலர் தகவல்

முதலமைச்சர் கலைஞர் கருத்தறிவிப்பு

சென்னை, நவ. 2—

"ஊராட்சி ஒன்றியங்களின் நிதி ஆதாரங்கள் பற்றிப் பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து நிதிப் பற்றுக்குறையுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதல் அரசாங்க மானியம் கிடைக்கலாம்.

'இந்தக் குழுவின் பரிந்துரைகளின்படி, நம் மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்தும் சில வருவாய் அடிப்படையில் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன; இதன் காரணமாக நிதிப் பற்றுக்குறையுள்ள ஒன்றியங்களுக்கு அரசு மானியம் கூடுதலாகக் கிடைக்கும்"

என்று தமிழ்நாடு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்களின் 7-வது கூட்டத்தில் வரவேற்புரையாற்றுகையில் தெரிவித்தார்.

"ஆசிரியர்கள் ஊதியம் சம்பந்தமாக ஊதியக் குழுவின் சிபாரிசுகளைச் செயல்படுத்தியதால் ஏற்படும் கூடுதல் செலவை பல ஊராட்சி ஒன்றியங்களால் சமாளிக்க இயலவில்லை" என்றும் அவர் சொன்னார்.

இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இப்பிரச்சினை பற்றித் தம்முடைய உரையில் குறிப்பிடுகையில், 'ஊராட்சிகளின் நிதி வசதி மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்; அரசாங்க மானியம் சம்பந்தமான விதிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்' என்று கருத்தறிவித்தார்.

எல்லாக் கிராமங்கட்கும் குடிநீர் வசதி

அமைச்சர் மாதவன்— கந்தப்பன் தகவல்கள்

மதுரை, அக். 30—

தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம், இராமநாதபுரம் மாவட்டத்துக்கான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது பற்றிய கருத்தரங்கை சட்ட அமைச்சர் மாதவன் இங்கு துவக்கி வைத்துப் பேசினார்.

500-க்கும் கூடுதலாக ஆனால் 2000-க்கும் குறைவாக மக்கட் தொகையுள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வசதி இல்லாத கிராமங்கள் பற்றிய விவரங்களைத் திரட்டி—அவற்றின் அடிப்படையில் அதற்கான திட்ட மதிப்பீடுகளை வகுப்பதே இக்கருத்தரங்கின் நோக்கமாகும்.

அமைச்சர் மாதவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இராமநாதபுரத்தில் குடிநீர் வசதிக்காக ரூ. 1 கோடி செலவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது; தர்மபுரிக்கு மற்றொரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

குடிநீர்த் திட்டங்களுக்கு ஆய்வுக்கான செலவைக்கூட ஏற்க முடியாத நிலையில் உள்ள சிறு ஊராட்சிமன்றங்கள் நிதி உதவிக்கு இந்த வாரியத்தை அணுகலாம்."

குடிநீர் வாரியத் தலைவர் செ. கந்தப்பன் பேசுகையில் கூறியதாவது:—

"தமிழ்நாட்டிலுள்ள கிராமங்கள்—குக்கிராமங்கள் எண்ணிக்கை 58,000; ஆனால் இவற்றில் 15,000 கிராமங்கள்தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியைப் பெற்றுள்ளன.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிந்து சென்றவர்கள் விலாசம் விசாரிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது; ஆனால், தி. மு. க.-விலிருந்துபிரிந்துசென்றவர்களுக்குப் பத்திரிகை பலம் இருப்பதால், கொஞ்ச நாளைக்கு அவர்கள் விலாசம் தெரியும்!"

மலிவு விலைத் துணி விற்பனை

நவம்பர் முதல் அரசே ஏற்று நடத்தும்

புதுடில்லி, அக். 31—

இப்போது உற்பத்தி செய்யப்படும் மலிவு ரகத் துணிகள், தனியார் கடைகளின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன; ஆனால், அரசாங்கம் நிர்ணயித்த விலையைவிட அதிக விலைக்கே இந்தத் துணிகள் விற்கப்படுகின்றன; இதனால், இந்த மலிவு ரகத் துணிகளைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்காக—துணி வியாபாரத்தை மத்திய அரசு ஏற்று நடத்துகிறது.

வேட்டி, சேலை—லாங்கிளாத் சட்டைத் துணி—ஆகிய ரகங்களின் முரட்டுத் துணி நடுத்தர துணி ஆகியவற்றை மத்திய அரசு விற்பனை செய்யும்; ஆலைகளிலிருந்து நேரிடையாக இந்தத்துணிகளை வாங்கிக் கூட்டுறவுக் கடைகள் மூலமாகவும் மற்ற நியாய விலைக் கடைகள் மூலமாகவும் துணி விற்பனை நடைபெறும்.

துணிகள் மீது அரசாங்கம் நிர்ணயித்த விலை அச்சிடப்பட்டிருக்கும்.

இந்த துணி வியாபாரம் நவம்பர் 1-ந் தேதி முதல் தொடங்குகிறது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

'நவசக்தி' பத்திரிகைக்கு 10 சதவீதம் மின்சார வெட்டு போக ஒவ்வொரு மாதத்துக்கும் 4,500 யூனிட்டு அனுமதிக்கப்பட்டிருந்தது; ஆனால், அவர்கள் 5,526 யூனிட்டுவரை செலவழித்துவிட்டார்கள்; அதிகப்படியாக 1,016 யூனிட்டு செலவழித்திருக்கிறார்கள்.

அதேபோன்று 'நவமணி' பத்திரிகைக்கு 278 யூனிட் அனுமதிக்கப்பட்டிருந்தது; ஆனால் அவர்கள் 397 யூனிட் செலவு செய்திருக்கிறார்கள்; அதிகப்படியாக 119 யூனிட் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

எனவே, இப்போதுள்ள மின்சாரப் பற்றுக்குறையை மனத்தில் வைத்துக்கொண்டு அனைவரும் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம். ஏ. எம். பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]